V10T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டு பொதுத்தேர்வு - 2023

-----

கால அளவு: 3.00 மணிநேரம்

வகுப்பு 10

தமிழ்

மதிப்பெண்கள்: 100

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. **15×1=15**

1) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ........

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2) சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

3) சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..........

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

4) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே -

அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய

இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்

5) **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

அ) கொண்டல் - 1. மேற்கு
ஆ) கோடை - 2. தெற்கு
இ) வாடை - 3. கிழக்கு
ஈ) தென்றல் - 4. வடக்கு

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

6) 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப் பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சியடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

7) 'சிலம்பு அடைத்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ...........

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

8) அருந்துணை என்பதைப் பிரித்தால் ...........

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

9) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ...........
இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ..........

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

10) மலர்கள் தரையில் நழுவும் - எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

11) சிறுகிங்கிணி - இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினைத்தொகை ஆ) எண்ணும்மை

இ) பண்புத்தொகை ஈ) பெயரெச்சம்

12) வால்காவிலிருந்து கங்கைவரை - எனும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ...........

அ) மணவை முஸ்தபா ஆ) ராகுல் சாங்கிருத்யாயன்

இ) குலோத்துங்கன் ஈ) கணமுத்தையா

13) ஸ்டீபன் ஹாக்கிங்கிற்கு ஏற்பட்ட நோய்

அ) காலரா ஆ) தொழுநோய்

இ) பக்கவாதம் ஈ) காய்ச்சல்

14) 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' - இப்பழமொழியில் உள்ள தொடர்வகை யாது?
அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்
இ) உரிச்சொல் தொடர் ஈ) அடுக்குத் தொடர்

15) உயிரின வாழ்வின் அடிப்படை
அ) மழை ஆ) நீர் இ) இயற்கை ஈ) நெருப்பு

## பகுதி - II (மதிப்பெண் 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 4×2=8**
**(21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16) விடைகளுக்கேற்ற வினா அமைக்க
அ) உயிரினும் ஓம்பப் படுவது ஒழுக்கம்
ஆ) ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பினும், அது இழிவு ஆகாது

17) வசன கவிதை - குறிப்பு வரைக.

18) ஒரு நாட்டின் பண்பாடும் அறிவும் எதைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றன?

19) தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கை எழுதுக.

20) இன்றைய வளரும் நாடுகளில் மொழிபெயர்ப்பு எவற்றையெல்லாம் உருவாக்க உதவுகிறது?

21) 'உலகு' - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5×2=10**

22) கலைச்சொற்கள் தருக. அ) Cosmic rays ஆ) Myth

23) 'வேங்கை' என்பதைத் தனிமொழியாகவும், தொடர்மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

24) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதி தொடரில் அமைக்க.

25) பால் வழுவமைதி என்றால் என்ன? சான்று தருக.

26) விடையின் வேறு பெயர்களைக் கூறுக.

27) காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

28) பகுபத உறுப்பிலக்கணம் தருக - செய்வான்.

## பகுதி - III (மதிப்பெண் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6**

29) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ..... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ......உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

30) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும், மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக் காலம் கடந்தது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
இ) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்று

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். (34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** **2×3=6**

32) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக

33) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது

34) அருளைப் பெருக்கி - எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல் - அடிபிறழாமல் எழுது.

**(அல்லது)**

வெய்யோன் ஒளி - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல் - அடிபிறழாமல் எழுது.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடு, மாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

-இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36) முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

37) வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண் 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்துப் பாடலையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்று உருவாக்கு.

**(அல்லது)**

ஆ) இறைவன் புலவர் இடைக்காடனாருக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் விளக்குக.

39) அ) தரமற்ற உணவினை வழங்கிய உணவு விடுதி ஒன்றின் மீது புகார் தெரிவித்து உரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றத் தோழனுக்குப் பாராட்டு மடல் எழுதுக.

40) அ) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**ஆ) கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவம் நிரப்புக.**

41) விருதுநகர் மாவட்டம் சிலம்பூரில் 15/2-ம் இலக்க வீட்டில் குடியிருக்கும் சுந்தரம் மகன் முருகன் பத்தாம் வகுப்பு படித்து முடித்துள்ளான். பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள நூலக உறுப்பினராக விரும்புகிறான். தேர்வர் தம்மை முருகனாகக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42) அ) உன்னைப் பற்றி எழுதுக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| | |

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Malar : Devi, switch off the lights when you leave the room.

Devi : Yeah, We have to save electricity.

Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night

Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky.

Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi : Superb news! If we launch artificial moons. They can assist in disaster relief by beaming light on areas that lost power!

## பகுதி - V (மதிப்பெண் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) ஒரு குழந்தையை தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி மூலம் விளக்குக.

(அல்லது)

ஆ) 'அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்' - எனும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

45) அ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறை கருத்துக்கள் தமிழுக்குச் செழுமை

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) விண்வெளியும் கல்பனாசாவ்லாவும் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

- - - - - - -